5th July 1962]

வரையில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது, ரோடுகளை தார் ரோடாக மாற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை சர்க்கார் உணர்ந்திருக்கிறது.

*** 138 Q.—Sri R. RANGASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—**

(*a*) whether the scheme for the formation of the road to Panrimalai in Dindigul taluk has been included in the Third Five-Year Plan; and

(*b*) if so, priority given therefor?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The question of including this work in the Third Five-Year Plan under the Central Aid Programme for development of roads of economic or inter-State importance is under correspondence with the Government of India.

திரு. ஆர். ரங்கசாமி : கோடைக்கானல் மலையில்—திண்டுக்கல் வட்டத்திற்குக் கீழ்ப் பகுதியிலுள்ள சோளக்காடு, பன்றிமலை போன்ற பெரும் பகுதி எந்தவிதமான வசதியும் இல்லாததனுல்—மற்ற இடங்களில் போடப்பட்ட ரோடுகளை தார் ரோடாக மாற்றுவதற்குப் பணத்தைச் செலவழிப்பதைக் காட்டிலும், ரோடு வசதியே இல்லாத இந்தப் பகுதிகளில் ரோடுகளை முதலில் போட்டுக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமைய்யா : ரோடு வசதியே இல்லாத பகுதிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தினுல் தான் இதுபோன்ற திட்டங்களை அரசாங்கம் பரிசீலனை செய்து, அதற்கு மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்யவேண்டும் என்று கோரியிருக்கிறோம். அவர்களது அங்கீகாரமும், நிதி உதவியும் கிடைத்தவுடன் இந்த வேலைகள் எல்லாம் உடனே துவங்கப்படும்.

நகராட்சிகளின் காலம் நிர்ணயித்தல்.

*** 139 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியனின் காலம் ஐந்து ஆண்டுகள் என்று இருக்கும்போது நகராட்சிகளின் காலம் மட்டும் மூன்று ஆண்டுகளாக இருப்பதின் காரணமென்ன?

(இ) இதன் பதவிக் காலத்தையும் ஐந்து ஆண்டுகளாக நீடிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகிறதா? அதன் முடிவு என்ன?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) & (*b*) No specific reason can be furnished for fixing the term of office of the Municipal Councils as three years. However, the question of enhancing the term of office of the Municipal Councils from three to five years is under consideration of the Government. A decision has not so far been reached in the matter.